2025 – ஏப்ரல் மாதம் 15– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 178 / 2023*

*2025–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய P W 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | P W 1, கோகுல்ராஜ் |
| தகப்பனார் பெயர் | : | இருதயசாமி |
| ஊர் | : | அம்பேத்கார் தெரு, வேலூர் கிராமம், |
| வட்டம் | : | பெரம்பலூர் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | டெலிவிரி பாய் |
| வயது | : | 34 |

<u>தேதி:**15.04.2025.**</u>

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். மனு விபரங்கள் குறித்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்கவேண்டுகின்றேன். எனது தரப்பில் தாக்கல் செய்யப்படும் கீழ் கண்ட ஆவணங்களை மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்து கொள்ள வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**<u>எனது சார்பாக:–</u>**

**1).**22.02.2023–ம் தேதியிட்டு பெரம்பலூர் காவல் நிலைய குற்ற எண் 107 / 2023–ன் கீழ் இதச பிரிவுகள் 279, 337–ன் படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகல் **ம.சா.ஆ.1.**

**2).** 21.02.2023 முதல் 25.02.2023 வரை திருச்சி KMC மருத்துவமனையில் நான் சிகிச்சை பெற்றதற்கு என் பெயருக்கு வழங்கப்பட்ட விடுவிப்பு சான்று அசல் 4– தாள்கள் அடங்கியது **ம.சா.ஆ.2.**

**3).** திருச்சி KMC மருத்துவமனை மற்றும் பெரம்பலூர் பிரியம் மருத்துவமனையில் இருந்து என் பெயருக்கு வழங்கப்பட்ட மருத்துவ பில்கள் 12– எண்ணிக்கைகள் கொண்டது, ரூ.1,12,798/–க்கானது அசல் **ம.சா.ஆ.3, (2–ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகின்றது).**

**4).** திருச்சி KMC மருத்துவமனையில் இருந்து என் பெயருக்கு வழங்கப்பட்ட Radiology Report அசல் **ம.சா.ஆ.4,**

**5).** 1–ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் வாகனப்பதிவுப்புத்தகம் நகல் **ம.சா.ஆ.5,**

**6).** 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் வாகன காப்பீட்டு நகல் **ம.சா.ஆ.6,**

**7).** 1–ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் ஜெராக்ஸ் நகல் **ம.சா.ஆ.7,**

**8).**எனது ஆதார் அடையாள அட்டையின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகின்றது அது **ம.சா.ஆ.8,** ஆக தாக்கல் செய்கின்றேன்.

எனது சாட்சியம் மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு மனுப்படி உத்தரவாக வேண்டுகின்றேன்.

**குறுக்கு விசாரணை:– (2–ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றவர் அந்த வாகனத்தின் உரிமையாளர் அன்பரசன் என்றால் சரிதான். விபத்து நடந்த சமயம் இரவு 09.30 மணி என்றால் சரிதான். அந்த சாலையில், அந்த சமயத்தில் போக்குவரத்து அதிகமாக இருக்காது என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் பெரம்பலூர் அரசு மேல் நிலைப்பள்ளிக்கு எதிர்புறம் என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் இரவு நேரத்தில் எந்த பாதாள சாக்கடை வேலையும் நடைபெறவில்லையென்றால் சரியல்ல. அந்த சமயத்தில் லாரி எனக்கு எதிர்புறமாக வந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் பாதாள சாக்கடை பணி நடைபெறுகின்றது என்பதை காட்டுவதற்கு அந்த இடத்தில் சிகப்பு விளக்கும், தடுப்பும் வைத்திருந்தார்களா என்றால் வைத்திருந்தார்கள்.

காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது எனது சகோதரியாவார். எனது சகோதரி மோட்டார் சைக்கிளை நான் தான் ஓட்டிச்சென்றதாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். சாட்சி தற்போது மோட்டார் சைக்கிளை நான் தான் ஓட்டிச்சென்றேன் என்று சாட்சியம் அளிக்கின்றார். விபத்து சமயத்தில் எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது, தற்போதும் உள்ளது. எனது ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். விபத்தினால் எனக்கு முகம், மற்றும் நெற்றியில் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் தலைக்கவசம் அணிந்து சென்றிருந்தால் முகம் மற்றும் நெற்றியில் காயம் ஏற்பட்டிருக்காது என்றால் நான் தலைக்கவசம் அணிந்திருந்தேன். நான் சரியாக பார்த்தது வாகனத்தை ஓட்டிச்சென்றிருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லையென்றால் நான் சரியாக தான் வாகனத்தை ஓட்டிச்சென்றேன். எனக்கு எதிரில் வந்த லாரி மெதுவாக தான் வந்தது என்று சொன்னால் சரியல்ல. நான் லாரியை கவனிக்காமல் சென்று விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்தில் ஒரு வழிப்பாதை எதுவும் இல்லையென்றும், நான் தவறான திசையில் சென்று விட்டு ஒரு வழிப்பாதை இருப்பதாக பொய் சொல்கின்றேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடமும், பெரம்பலூர் அரசு மருத்துவமனையும் பக்கத்தில் உள்ளது என்றால் சரிதான். விபத்து ஏற்பட்டவுடன் என்னை முதலில் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் தான் சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றால் சரிதான். விபத்து என்னால் ஏற்பட்டது என்று அரசு மருத்துவமனையில் நான் சொல்லி விபத்து பதிவேட்டில் குறிக்கப்பட்டதால் தான் அந்த விபத்து பதிவேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்று சொன்னால் சரியல்ல. நான் திருச்சி கேஎம்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்னர் பெரம்பலூர் பிரியம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல. நான் பெரம்பலூர் பிரியம்

மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான மருத்துவ பில் மட்டும் தாக்கல் செய்துள்ளேனே தவிர மருத்துவ குறிப்பு சீட்டை தாக்கல் செய்யாததால் விபத்து காயத்திற்காக சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்று கூற இயலாது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.3 ஆவணத்தில் கண்டுள்ள சிகிச்சைகள் விபத்திற்கு தொடர்பில்லாதது என்று சொன்னால் சரியல்ல. மருத்துவ பில்களை நஷ்டஈடு அதிகம் பெறவேண்டும் என்ற எண்ணத்தில் தயார் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. நான் தனியார் பிஸ்கட் நிறுவனத்தில் வேலை செய்து மாதம் ரூ.15,000/– ஊதியம் பெற்றதற்காக அந்த நிறுவனத்தில் இருந்து சான்று பெற்று ஆவணமாக தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். நான் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் வேலை செய்து கொண்டுள்ளேன் என்றால் சரிதான். விபத்தினால் எனக்கு வருமான இழப்போ, உடல் ஊனமோ ஏற்படவில்லையென்றால் சரியல்ல. விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவு தான் காரணம் என்பதால் மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. இந்த மனு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றாலும், வாகனத்தை ஓட்ட தெரியாமல் ஓட்டி விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்பதால் மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:– இல்லை.**

**ஒப்பம்/– சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**